எண்: 101/2024 நாள்: 30/08/2024

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண் 3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003.

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (நேர்முகத் தேர்வு) அடங்கிய பதவிகளுக்கான தேர்வு 12.08.2024 மு.ப., 19.08.2024 மு.ப & பி.ப, 20.08.2024 மு.ப., & பி.ப., 21.08.2024 மு.ப ஆகிய நாட்களில் கணினி வழித் தேர்வாக நடத்தப்பட்டது.

இதில் 12.08.2024 அன்று முற்பகல் நடந்து முடிந்த தாள் – I (தமிழ் தகுதித் தேர்வு மற்றும் பொது அறிவுத்தாள்) க்கான உத்தேச விடைகள் தேர்வாணைய இணைய தளத்தில் 23.08.2024 அன்று வெளியிடப்பட்டது. உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய 30.08.2024 வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்வதில் தேர்வர்களுக்கு தொழில்நுட்ப இடையூறு ஏற்பட்டதாக அறியப்பட்டதால் மேற்படி தேர்வுத்தாளின் உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்வதற்கான கால அவகாசம் 09.09.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

A. ஜான் லூயிஸ் இ.ஆ.ப

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்